## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். 104 /2020**

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் தேதி திங்கட் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வி | தொழில் | :வீட்டுவேலை |
| கணவர் பெயர் | :காளி | சமயம் | : |
| கிராமம் | : திருவண்ணாமலை டவுன் | சாதி | : |
| வட்டம் | : திருவண்ணாமலை | வயது | : 43 |

தேதி 17.04.2023

சாட்சியையும் எதிரியும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. லியோடைமண்ட்ராஜ் P.C. - 2391 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர் .)**

**முதல் விசாரணை**

**1.** நான் திருவண்ணாமலை வ.உ.சி 10 வது தெருவில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்தபோன காளி என் கணவர்.

2.கடந்த 24.06.2018 ம் தேதியன்று மாலை 3.10 மணி அளவில் பாலப்பாடியில் என் சித்தப்பா இறந்துவிட்டார். அவரது இறப்பிற்கு நானும் என் கணவரும் சென்றுவிட்டு வீடு திரும்ப பாலப்பாடி கூட்ரோட்டில் பஸ் ஏறுவதற்காக நின்று கொண்டியிருந்தோம். அப்போது திருவண்ணாமலையில் இருந்து செஞ்சியை நோக்கி வந்த அரசு பேரூந்து TN 322357 என்ற பேரூந்து ஆரன் அடிக்காமல், அஜாக்கிரதையாகவும் வந்து என் கணவரின் மீது மோதி பின் மண்டையில் அடிப்பட்டு அந்த இடத்திலேயே என் கணவர் காளி இறந்துவிட்டார். மேற்படி அரசு பேரூந்தை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியவர் நீதிமன்றத்தில் கூண்டில் நிற்கும் ஆஜர் எதிரிதான். பிறகு ஆம்பலன்ஸ் மூலமாக செஞ்சி அரசு மருத்துவமனைக்கு என் கணவரின் உடலை எடுத்துச்சென்றார்கள். அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்து உடலை கொடுத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகாரை நான்தான் கொடுத்தேன்.

**(24.06.2018 தேதியிட்ட புகார் மனு அ.சா-ஆ .1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது).**

**குறுக்குவிசாரணை:**

3. போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் முன்வராததால் சாட்சியின் விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.